## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1) இரண்டாவது **ASEAN** இந்திய இளைஞர்கள் மாநாடு **2019** எங்கே நடைபெற்றது?

A] புனே

B] கௌஹாத்தி

C] ஹைதராபாத்

D] ஜெய்ப்பூர்

- ✓ இரண்டாவது **ASEAN** இந்திய இளைஞர்கள் மாநாடு **2019** கவுகாத்தி அசாமில் **03-06** பிப்ரவரி **2019** ல் நடைபெற்றது. இதன் கருப்பொருள் "இணைப்பு கொள்கையே வளங்களை பகிர்வதற்கான வழி" - **"Connectivity is the pathway to shared prosperity"**. இவ்விழாவினை இந்தியா பவுண்டேஷன், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம், அசாம் மாநில அரசு இணைந்து நடத்தியது.
- ✓ இதில் புரூனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோ பமலேசியா,மியன்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் போன்ற நாடுகளில் இருந்து நூற்றுக்கணக்கான இளம் பங்கேற்பாளர்கள் பங்கு பெற்றனர்.
- ✓ **ASEAN** நாடுகளுக்கு இடையேயான பரஸ்பர ஒத்துழைப்பை பலப் படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். இவ்வாறு இந்த **2019** மாநாடு வெவ்வேறு நாடுகளுக்கு இடையே ஆன சமூக-கலாச்சார பரிமாற்றங்களை செய்துகொள்ளும்போது பன்முகத்தன்மை சகிப்புத்தன்மை ஆகியவற்றை பலப்படுத்தும்.

2) கீழ்க்காணும் விதிகளில் எந்த விதியின் அடிப்படையில் "வங்கிகள் கட்டுப்பாட்டு சட்டம் **1949**"ஐ மீறியதற்காக **SBI** வங்கிக்கு **RBI** வங்கி ஒரு கோடி ரூபாய் அபராதம் விதித்தது?

A] பிரிவு **35a**

B] பிரிவு **44a**

C] பிரிவு **47a**

D] பிரிவு **49a**

- ✓ "வங்கிகள் கட்டுப்பாட்டு சட்டம் **1949**" அடிப்படையில் **RBI** வங்கிக்கு இவ்விதியை தவறும் பிற வங்கிகளின் மீது நடவடிக்கை எடுக்க உரிமை உள்ளது. இதன் அடிப்படையில் **SBI** வங்கி தனது

கடனாளியின் பணப்பரிவர்த்தனையின் நோக்கத்தை கண்காணிக்க தவறியதால் SBI வங்கி மீது RBI வங்கி ஒரு கோடி ரூபாய் அபராதம் விதித்தது. எனினும் SBI வங்கி தனது கடனாளியின் விவரங்களையும் கடன் தொகையையும் கூற மறுத்துவிட்டது.

**3) சமீபத்தில் RBI வங்கியானது பிணையற்ற விவசாய கடன் வரம்பை ஒரு லட்ச ரூபாயில் இருந்து எத்தனை ரூபாயாக உயர்த்தியது?**

A] 1.4 லட்சம்

B] 1.5 லட்சம்

C] 1.6 லட்சம்

D] 1.7 லட்சம்

- ✓ சமீபத்தில் ஆர்பிஐ வங்கி ஒரு லட்சம் ரூபாயில் இருந்து 1.6 லட்சம் ரூபாயாக பிணையற்ற விவசாய கடன் வரம்பை அதிகரித்துள்ளது. இதன் மூலம் சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளும் அமைப்பு சார்ந்த கடன் பெற்று பயனடைய முடியும். ஒரு லட்ச ரூபாய் வரம்பு 2010 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.
- ✓ இத்தகைய கடனுதவி திட்டத்தில் உள்ள குறைபாடுகளை அறிவதற்கும் அதை களைவதற்கும் ஒரு உள்கட்டமைப்பு குழுவை அமைக்குமாறு RBI வங்கி பரிந்துரை செய்துள்ளது. 2019 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் படி இந்திய அரசாங்கம் பிரதான் மந்திரி கிசான் சம்மன் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது இதன் மூலம் சிறு மற்றும் விளிம்புநிலை விவசாயிகளின் வருமானத்தை உறுதி செய்கிறது.
- ✓ இந்தத் திட்டத்தின் மூலம் 2 ஹெக்டேர் விவசாய நிலங்களை வைத்திருக்கும் விவசாய குடும்பங்களுக்கு ஆண்டுதோறும் 6,000 ரூபாய் மூன்று தவணைகளாக (₹2000) பயனாளிகளின் வங்கிக் கணக்கில் இந்திய அரசாங்கத்தால் வரவு வைக்கப்படும்.

**4) உலக பருப்பு தினம் முதல் முறையாக எந்த நாளில் அனுசரிக்கப்பட்டது?**

A] பிப்ரவரி 11

B] பிப்ரவரி 9

C] பிப்ரவரி 8

Winmeen.com

D] பிப்ரவரி 10

- ✓ பருப்புகளை உணவில் சேர்த்துக் கொள்வதால் ஏற்படும் நன்மைகளை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பிப்ரவரி 10ஆம் தேதி முதல் முறையாக உலக பருப்பு தினம் அனுசரிக்கப்பட்டது. பருப்பு வகைகள் முற்றிலும் உலர்ந்தவையாக முடிச்சு வகை தாவரத்தை சேர்ந்தது.
- ✓ பட்டாணி, உலர்ந்த பீன்ஸ், துவரம் பருப்பு ஆகியவை நாம் அன்றாடம் வாழ்வில் அதிகம் பயன்படுத்தும் பருப்பு வகைகள் ஆகும். பச்சை பட்டாணியும் பச்சை பீன்சும் பருப்பு வகைகளை சாராது, அவை பச்சைக் காய்கறி வகைகளை சேரும்.
- ✓ **2016**ஆம் ஆண்டில் நடைபெற்ற **FAO** வின் சர்வதேச பருப்பு ஆண்டு பிரச்சாரத்தின் வெற்றியைத் தொடர்ந்து **2018** ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் பிப்ரவரி **10** உலக பருப்பு தினமாக அறிவிக்கப்பட்டது.

**5) "Law, Justice and Judicial Power – Justice P N Bhagwati's Approach"**

"சட்டம், நீதி, நீதித்துறையின் சக்தி - நீதியரசர் பி என் பகவதியின் அணுகுமுறை" என்ற நூலின் ஆசிரியர் யார்?

A] மூல்சந்த் சர்மா

B] ரூபேந்தர் சூரி

C] சசி தரூர்

D] சோலி சொராப்ஜி

- ✓ 'சட்டம், நீதி, நீதித்துறையின் சக்தி- நீதியரசர் பி என் பகவதியின் அணுகுமுறை' என்ற நூலை பேராசிரியர் டாக்டர் மூல்சந்த் சர்மா எழுதினார். இதனை புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் அவர்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டார்.
- ✓ இப்புத்தகத்தின் முதல் பிரதியை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பெற்றுக்கொண்டார். பி என் பகவதி இந்தியாவின் 'பொதுநல வழக்கின் தந்தை' என அழைக்கப்படுகிறார்.
- ✓ பி என் பகவதி அவர்கள் நீதித் துறைக்கு ஆற்றிய பங்குகளை சிறப்பிக்கும் விதமாகவும் அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புகளை போற்றும் விதமாகவும் இப்புத்தகத்தில் **24** கட்டுரைகள் இடம் பெற்றுள்ளது.

**6) கீழ்காணும் மாவட்டங்களில் உத்தரகண்டின் எந்த மாவட்டத்தில் 'இமாலயன் மேகங்கள் ஆய்வகம்' [ Himalayan Cloud Observatory] அமைந்துள்ளது?**

**A]** பகேஸ்வர்

**B]** பித்தோராகர்க்

**C]** டெஹ்ரி கார்வால்

**D]** ருத்ர பிரயாக்

- ✓ ஹிமாலயன் பகுதியில் ஏற்படும் மேகங்களின் வெடிப்புகளை கண்காணிப்பதற்காக உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள டெஹ்ரி கார்வால் மாவட்டத்தின் **SRT** வளாகம் - சம்பா என்னும் இடத்தில் 'ஹிமாலயன் மேகங்கள் ஆய்வகம்' சமீபத்தில் அமைக்கப்பட்டது.
- ✓ இது இந்தியாவின் இரண்டாவது மேகங்கள் ஆய்வகம். இதனை இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை **(IST)** மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம்**(IIT)** ,கான்பூர் இணைந்து பணியில் ஈடுபடுகிறது. உத்தரகாண்ட் மற்றும் இமாலயன் போன்ற மலைப் பிரதேசங்களில் மேகவெடிப்பு அடிக்கடி நடைபெறும் நிகழ்வாகும். இதனால் பல உயிரிழப்புகள் ஏற்படுகிறது இதனை முன்கூட்டியே கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப் பட்டதே இந்த ஆய்வகம்.
- ✓ இந்தக் ஆய்வகம் தற்போது ஆறு மாதங்களுக்கான ஆய்வறிக்கையை சோதனை முறையில் தயார் செய்து உள்ளது. இதன் பிறகு நடக்கவிருக்கும் மேகவெடிப்புகளை முன்கூட்டியே ஆராய்ந்து உயிர் மற்றும் பொருள் இழப்புகளை குறைக்கும் நடவடிக்கையில் இந்த ஆய்வகம் ஈடுபடும்.

**7) கீழ்க்காணும் நாடுகளில் எது இந்தி மொழியை மூன்றாவது அதிகாரப்பூர்வமான மொழியாக நீதிமன்றங்களில் அறிவித்துள்ளது?**

**A]** ஈரான்

**B] UAE**

**C]** சவுதி அரேபியா

**D]** ஓமன்

- ✓ அரபி, ஆங்கிலத்தை தொடர்ந்து நீதிமன்றங்களில் மூன்றாவது அதிகாரப்பூர்வமான மொழியாக ஹிந்தியை அபுதாபி நீதித்துறை சமீபத்தில் அறிவித்துள்ளது.

- ✓ இதன்மூலம் இந்தி மொழியை மட்டுமே அறிந்தவர்கள் நீதித்துறையை எளிதாக அணுக முடிவதோடு மட்டுமின்றி அவர்களின் உரிமைகள், கடமைகள், வழக்குத் தொடரும் முறை போன்றவற்றை தடையில்லாமல் அறிந்து கொள்ள இயலும்.கருத்துக்கணிப்பில் **3.3** மில்லியன் இந்தியர்கள் ஐக்கிய அமீரகத்தில் வசிப்பதாக கூறுகிறது.
- ✓ இவர்களில் பெரும்பாலானோர் ப்ளூ கலர் தொழிலாளிகள் என அறியப்படுகிறார்கள். இது மிகவும் பாராட்டுக்குரிய நடவடிக்கை ஆகும். இந்த முன்னெடுப்பு அமீரகத்தின் சகிப்புத்தன்மை காண ஆண்டின் ஒரு மணி மகுடம் ஆகும்.

**8)** கீழ்க்காணும் நகரங்களில் எங்கே பதின்மூன்றாவது சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு மாநாடு **PETROTECH 2019** நடைபெற்றது**?**

**A]** கிரேட்டர் நொய்டா

**B]** டேராடூன்

**C]** சிம்லா

**D]** போபால்

- ✓ உத்தரப்பிரதேசத்தில் உள்ள கிரேட்டர் நொய்டா என்னும் நகரத்தில் பிப்ரவரி **11**ஆம் தேதி **13** ஆவது சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு மாநாடு **PETROTECH-2019** நடைபெற்றது இதனை பிரதம மந்திரி நரேந்திர மோடி அவர்கள் தொடங்கி வைத்தார்.
- ✓ இதனை மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தலைமையேற்று நடத்தியது. இது இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை கூடும் மாநாடு ஆகும்.
- ✓ **3** நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு துறையில் உள்ள முதலீட்டுக்கான வாய்ப்புகளையும் துறையின் முன்னேற்றங்களையும் வெளிப்படுத்தும் விதமாக அமைந்தது. நட்பு நாடுகளை சேர்ந்த **95** ஆற்றல் அமைச்சர்களும் **70** நாடுகளைச் சேர்ந்த **7** ஆயிரத்துக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களும் இந்த மாநாட்டில் பங்கு பெற்றனர்.

**9)** எந்த நாட்டின் பிரதமர் ஐக்கிய ஆப்பிரிக்கா சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்**?**

**A)** சாம்பியா

**B)** எகிப்து

**C)** தென் ஆப்பிரிக்கா

**D)** எத்தியோப்பியா

- ✓ எத்தியோப்பியாவில் நடைபெற்ற மாநாட்டில் எகிப்திய பிரதமர் அப்தல் ப்தா எல் சிசி **Abdel-Fattah el-Sissi** ஆப்பிரிக்கா ஐக்கிய சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ✓ **rwanda** வின் பிரதமரான பால் கஹாமே வை தொடர்ந்து எகிப்திய பிரதமர் ஆப்பிரிக்க சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ✓ எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒருவர் **2002**ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஐக்கிய ஆப்பிரிக்கா சபையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- ✓ இதில் ஆப்பிரிக்க கண்டத்தைச் சேர்ந்த **55** நாடுகள் உறுப்பினராக இருக்கிறது.ஆப்பிரிக்க நாடுகளுக்கும் ஆப்பிரிக்கர்களுக்கும் இடையே ஆன ஒற்றுமையை உறுதிப்படுத்தும் விதமாக தொடங்கப்பட்டதே இந்த அமைப்பாகும்.
- ✓ அரபி, ஆங்கிலம், பிரெஞ்சு, போர்ச்சுகீஸ் மற்றும் பிற ஆப்பிரிக்க மொழிகள் இந்த சபையின் பிரதான மொழிகளாகும்.
- ✓ இந்தச் சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டு அமைதி மற்றும் பாதுகாப்புத் துறையும் பான்-ஆப்பிரிக்கன் பாராளுமன்றமும் இயங்குகிறது.

10) சமீபத்தில் செய்திகளில் பேசப்பட்ட திக்கிபந்தி அரங்கம் (**Dikkibandi Stadium)** கீழ்காணும் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

**A]** நாகாலாந்து

**B]** திரிபுரா

**C]** மேகாலயா

**D]** அருணாச்சல் பிரதேஷ்

- ✓ மக்களவை சபாநாயகர் பூர்ணா சங்கமா அவர்களின் நினைவாக டுராடவுனில் உள்ள திக்கிபந்தி அரங்கத்தை பெயர் மாற்றம் செய்ய மேகாலய அமைச்சகம் முடிவு செய்துள்ளது. இதற்கு மேகாலயா முதலமைச்சர் கோன்ராட் சங்கமா ஒப்புதல் அளித்துள்ளார்.
- ✓ பூர்ணா சங்கமா மேகாலயாவின் முன்னாள் முதலமைச்சர் ஆவார். இவர் டுரா டவுனில் இருந்து பல முறை மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ✓ கோன்ராட் சங்கமா மற்றும் ஜேம்ஸ் சங்கமா இருவரும் பூர்ணா சங்கமா அவர்களின் மகன்கள் ஆவர்.

- ✓ திக்கிபந்தி அரங்கத்தை **MP** அரங்கம் என்றும் அழைப்பார்கள். மேலும் மேகாலயா அரசாங்கம் மவ்லாய்- மவ்ராவிலிருந்து மதன் நோக்கிச் செல்லும் சாலைக்கு புனிதர் தெரசா அவர்களின் பெயரிட முடிவு செய்துள்ளது.

winmeen.com